**கவனிக்க.**- 2006.04.28 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1444 - 2006 මැයි 05 වැනි සිකුරාදා - 2006.05.05

1444 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | – |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | – |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 286 |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | – |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | – |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 286 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | – |
| அரசாங்க அறிவித்தல்கள் | 287 |
| விலைக்கட்டளைகள் | – |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | – |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | – |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | – |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 288 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | – |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | – |


**கவனிக்க.**- (i) இலங்கை மின்சார சபை (திருத்தம்) சட்டமூலம் 2006, ஏப்பிறல் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) மின்சாரச் சீர்திருத்தம் (திருத்தம்) சட்டமூலம் 2006, ஏப்பிறல் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, மே 11 ஆந் தேதி வியாழக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, ஏப்பிறல் 28 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

2006 இன் இல. 88

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது :

இலங்கை பொறியியலாளர் சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த, திரு. பீ. எம். எஸ். சமரசேக்கர அவர்கள் 2005, நவெம்பர் மாதம் 18 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறு கட்டளை பிறப்பிக்கும் வரை நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகமாக.

5- 82

2006 இன் இல. 89

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது :

கலாநிதி எச். எல். ஒபேசேக்கர அவர்கள் 2005, திசெம்பர் மாதம் 19 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறு கட்டளை பிறப்பிக்கும் வரை தொழில்நுட்ப கல்வி, பயிற்சி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக.

5- 81

2006 இன் இல. 90

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது :

:இலங்கையில் நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த, திரு. எஸ். ஹப்புஆரச்சி அவர்கள் 2006, சனவரி மாதம் 23 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறுகட்டளை பிறப்பிக்கும் வரை களுத்துறை நிருவாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளராக/ அரசாங்க அதிபராக.

5-83/ 1

2006 இன் இல. 91

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது :

இலங்கையில் நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த, திரு. எஸ். எம். ஜீ. ஜயரத்ன அவர்கள் 2006, சனவரி மாதம் 23 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கண்டி நிருவாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளராக/ அரசாங்க அதிபராக.

5-83/ 2

# மற்றைய நியமனங்களும் பிறவும்

2006 இன் இல. 92

1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 45 (3) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் அமரசிறி தொடங்கொட ஆகிய நான், பின்வரும் அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தரணிகள் சம்பந்தப்பட்ட நீதி, நிருவாகப் பிரிவுக்கான சமாதான நீதவான் மற்றும் உத்தியோகப்பற்றற்ற நீதிவான்களாகவும் நியமிக்கின்றேன்.

அமரசிறி தொடங்கொட,
நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சர்.

நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சு,
கொழும்பு 12,
2006.04.04.

அட்டவணை

| | பெயர் | முகவரி | நீதிமன்ற நியாயாதிக்கம் |
|---|---|---|---|
| 1. | சட்டத்தரணி திருமதி பி. ரீ. ஜயலக்ஷ்மி உலுவிட்டிய | 123, பட்டுவந்துடாவ வீதி, உலுவிட்டிகே | காலி |
| 2. | சட்டத்தரணி திரு. ஹால்பன்தெனிய ஹேவகே முனிதாச | "சொமி செவன", பட்டுவன்ஹேன, எல்பிட்டி | எல்பிட்டி |
| 3. | சட்டத்தரணி திருமதி யமுனா புஷ்பகாந்தி மககமகே | "சிறிசெவண", பட்டுவன்ஹேன, எல்பிட்டி | எல்பிட்டி |

| | பெயர் | முகவரி | நீதிமன்ற நியாயாதிக்கம் |
|---|---|---|---|
| 4. | சட்டத்தரணி திருமதி இந்திகா சுரனீ நாகரத்ன கொத்தகொட | 76/1, தர்மராம மாவத்தை, கோட்டை, மாத்தறை | மாத்தறை |
| 5. | சட்டத்தரணி திரு. லலித் ஹேம கருணாரத்ன | 214/26, பொறால வீதி, வெலிகம | மாத்தறை |
| 6. | சட்டத்தரணி திரு. என். பீ. செனெவிரத்ன நிஷாந்த | அதிகரண மாவத்தை, கேகாலை | கேகாலை |
| 7. | சட்டத்தரணி திரு. அப்துல் காதர் அப்துஸ்ஸலாம் | வெல்பொதுவெவ, பொறலுவெவ | குளியாப்பிட்டி |
| 8. | சட்டத்தரணி திருமதி டபிள்யூ. ஏ. தமயந்தி பிரியங்கா பத்மகுமாரி இம்புல்கொட | இல. 12, வதாகட வீதி, கஹவத்தஎல, பொல்காவல | குருநாகல் |
| 9. | சட்டத்தரணி திருமதி தோன ஹயசிங் சுவினீதா மலலவாரச்சி | 220, வெலிகன்ன, வக | அவிசாவளை |
| 10. | சட்டத்தரணி சஜீவ பிரதீப் குமார ரத்நாயக்க | 107, அபய பிளேஸ், புதிய நகரம் அநுராதபுரம் | அநுராதபுரம் |

5-28

---

# அரசாங்க அறிவித்தல்கள்

## யாத்திரைகள் கட்டளைச் சட்டம்

கொடபிட்டிய முஸ்லிம் உற்சவம்

மாத்தறை மாவட்டத்தில் கொடபிட்டிய (போருவே), கொடபிட்டிய முஹியதின் முஸ்லிம் பள்ளிவாசலின் வருடாந்த கொண்டாட்டம் 2006, மே மாதம் 10 ஆந் திகதி ஆரம்பமாகி 21 ஆந் திகதி முடிவுறும் என்பதை (175 ஆம் அதிகாரம்) யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட 1954 ஆம் ஆண்டு சனவரி மாதம் 8 ஆந் திகதிய 10630 ஆம் இலக்க இலங்கை அரச வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் 3 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறியத்தரப்படுகின்றது.

1954 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதிய 10630 ஆம் இலக்க இலங்கை அரச வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மேற்கூறப்பட்ட காலப் பிரிவில் குறித்த ஒழுங்கு விதிகளின் கீழ் உப பிரிவில் விபரிக்கப்படுகின்ற 'கந்தவுற' துல எல்லையில் அமுலாகும்.

பீ. ரணவீர,
பிரதேச செயலாளர்,
அதுரலிய பிரதேச செயலாளர் பிரிவு.

அதுரலிய பிரதேச செயலகம்,
2006, ஏப்பிறல் 18.
5-79

A2-B 079259

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## மக்கள் வங்கி – மெனிக்கஹின்ன கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2005.01.07 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"மக்கள் வங்கியின் சார்பில் கண்டி சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய ஏ. கே. விஜேரத்ன அவர்களால் அத்தாட்சிப் படுத்திய 2001.03.20 ஆந் திகதிய 3068 ஆம் இலக்கங் கொண்ட ஈட்டு முறியின் பிரகாரம் கொழும்பைச் சேர்ந்த மஹறபட்டபெந்திகே ராலலாகே மேரியன் பெஸிலினா, மல்காந்தி பெரேரா ஆகியவர்கள் ஈட்டு முறியில் தவணை தவறியுள்ளதால், கூறப்பட்ட 3068 ஆம் இலக்கங் கொண்ட ஈட்டு முறியின் கீழ் தற்போது மூன்று இலட்சத்து முப்பத்தி நான்காயிரத்து தொளாயிரத்து நாற்பது ரூபாவும் பதின்மூன்று சதமும் (ரூ. 3,34,940.13) ஆன தொகைப் பணம் மக்கள் வங்கிக்கு அறவிட்டுக் கொள்ள வேண்டியுள்ளதால், 2002.02.07 ஆந் திகதி தொடக்கம் ஏலவிற்பனை தினம் வரை வருடாந்தம் நூற்றுக்கு இருபத்தாறு வீதம் (26%) மூன்று இலட்சத்து முப்பத்தி நான்காயிரத்து தொளாயிரத்து நாற்பது ரூபா பதின்மூன்று சதமும் (ரூ. 3,34,940.13) தொகைப் பணத்திற்காக மேலும் வட்டியும், அதற்குரிய ஏனைய கட்டணங்களும் பின்பு எவையேனும் கொடுப்பனவுகள் பெற்றிருப்பின் அதைக் கழித்து கூறப்பட்ட போது மூன்று இலட்சத்து முப்பத்தி நான்காயிரத்து தொளாயிரத்து நாற்பது ரூபா பதின்மூன்று சதமும் (ரூ. 3,34,940.13) ஆன தொகைப் பணத்தை மீண்டும் அறவிட்டுக் கொள்வதற்காக கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான சொக்மன் மற்றும் சமரவிக்ரம மூலம் மேற்கூறப்பட்ட 3068 ஆம் இலக்கங் கொண்ட ஈட்டுமுறியின் கீழ் முற் கூறப்பட்ட வங்கிக்கு அடகு வைத்திருக்கும் ஆதனமும் நிலமும் பிரிசித்த ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என மக்கள் வங்கிச் சட்டத்தின் "29எல்" பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை தீர்மானிக்கிறது".

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், அளுத்குருகோறளை ராகம்பத்துவில் ஜாஎல பிரதேச சபையின் கந்தான உப அலுவலகத்தில் நாகொடையில் அமைந்துள்ள கோங்ககாவத்த என்றழைக்கப்படும் காணியை உத்திரவுபெற்ற அளவையாளரான எம். டி. ஜே. பி. பெரேரா அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 12181 ஆம், 1982.10.15 ஆந் திகதி மூலவரைவு படத்தின் லொட் இலக்கம் 1 என அடையாளம் காட்டப்பட்டுள்ள பிரித்து ஒதுக்கப்பட்ட அறுவடையுள்ள பதின்நான்கு தசம் ஒன்று எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 14.18பே.) காணித்துண்டிற்கு எல்லைகள் – வடக்கில் : லொட் இலக்கம் 4, (4 அடி அகலமுள்ள பாதைக்கு ஒதுக்கப்பட்ட பகுதி) ; கிழக்கில் : லொட் இலக்கம் 2 ; தெற்கில் : வில்பட் விஜேசுந்தர முதியன்சேவின் காணியும் ; மேற்கு : லயனல் பர்னாந்துவிற்குரிய காணியும் ஆகிய எல்லைகளில் அமைந்துள்ள பூமியுடன் அதற்கு மேல் அமைந்துள்ள கட்டிடங்களும், மரங்கள் இலைகள், பழங்கள் ஆகிய சகலவைகளும் உட்படுவதுடன், கம்பஹா காணிப்பதிவு செய்யும் அலுவலகத்தில் வெலும/பத்இரு/பி/461/191 ஆம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது".

அதன் 12881 ஆம் இலக்கங் கொண்ட மூலவரைவு படத்தின் காட்டப்பட்டுள்ள லொட் இலக்கம் 4 இன் மேல் இருக்கும் பாதையில் (நான்கு அடி அகலமுள்ள பாதை) பாதை உரிமையும் உட்பட.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
(ம. வ.)

மக்கள் வங்கி,
மத்திய வலய அலுவலகம்,
17, தலதா வீதி,
கண்டி.

5-29

---

## மக்கள் வங்கி

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் பிரகாரம் கீழ்வரும் தீர்மானம் பணிப்பாளர் சபையினரால் 2003.04.30 ஆந் திகதி நடந்த அவர்களின் கூட்டமொன்றில் ஏகமனதாக பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது;-

"பத்திரன பண்டாரகே நந்தசேன என்பவர் மக்கள் வங்கி சார்பில் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு பீ. என். ஏக்க நாயக்காவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 548 ஆம் இலக்கத் தையும் 1997.12.26 ஆந் திகதியமுடைய கடன் முறிக்குறிய கொடுப்பனவுகளை வங்கிக்குச் செலுத்தத் தவறியதால், இப்பொழுது குறிப்பிட்ட மூன்று இலட்சத்து தொண்ணூற்றி ரண்டாயிரம் ரூபாய் (3,92,000) சக ஆறு இலட்சத்து, எழுபத்தி ரண்டாயிரம் ரூபாய் (ரூ. 6,72,000) மக்கள் வங்கிக்கு குறிக்கப்பட்ட முறியின் பேரில் கொடுபடவேண்டியுள்ளது. 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டப்படி பணிப்பாளர் சபைக்கு உரிமை வழங்கியுள்ள அதிகாரத்திற்கு இணங்க 548 ஆம் இலக்க கடன் முறியின் கீழ் மக்கள் வங்கிக்கு ஈடு வைக்கப்பட்டுள்ள சொத்தையும் வீட்டையும் (ஆதனங்களை) குறிக்கப்பட்ட மூன்று இலட்சத்து தொண்ணூற்றிரண்டாயிரம் ரூபா (ரூ.3,92,000) ; ஆறு இலட்சத்து எழுபத்திரண்டாயிரம் ரூபாவை (ரூபா 6,72,000), மீட்டெடுப்பதற்காக கொழும்பு அதிகாரம் பெற்ற ஏல விற்பனை யாளர் டன்ஸ்டன் கெலார்ட் என்பவரால் பொது ஏலத்தில் விற்பதற்கு தீர்மானம் செய்யப்பட்டுள்ளது. மேலும் மூன்று இலட்சத்து தொண்ணூற்றிரண்டாயிரம் ரூபாவும் (ரூ.3,92,000), 1998.01.23 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை வருடத்துக்கு

நூற்றுக்கு 28 வீத வட்டியுடனும், ஆறு இலட்சத்து எழுபத்திரண்டாயிரம் ரூபாவுக்கு (ரூ.6,72,000), 1998.01.23 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை வருடத்துக்கு நூற்றுக்கு 28 வீத வட்டியுடனும் விற்பனை சிலவும் குறைக்கப்பட்டு மீது (ஏதும் இருப்பின்) கட்டணம் கிடைத்த பின்"

### ஈடுவைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விவரணம்

மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத்தில், சியன்னே கோரளை அதிகாரி பத்துவில், தல்வத்த எனும் கிராமத்தில், அமைந்துள்ள 'கோன்கஹவத்த' எனும் காணிக்கு, அதிகாரம் பெற்றநில அளவையாளர் எம். டபிள்யு. டி. எஸ். டி. சில்வா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2766/ஏ ஆம் இலக்கமும் 1995.02.10 ஆந் திகதிய வரைபடத்தில் 1 ஆம் இலக்கத்தொகுதி எனப் பிரிக்கப்பட்டு வேறாக்கப்பட்டுள்ள காணிக்கு எல்லைகள் – வடக்கில் : எஸ். டி. தெலேனிஸ் ஜயசிங்கஹா வின் வாரிசுகளுக்கு உரிமைகோரும் காணியாலும், பாதையாலும் ; கிழக்கில் : காலஞ்சென்ற ஜொஹானிஸ் அப்புஹாமியின் வாரிசுகளுக்குரிய காணியாலும் ; தெற்கில் : கிறிந்திவெள கும்புற காணியின் மீதப்பகுதியாலும் ; மேற்கில் : எஸ். டி. தெலேனிஸ் ஜயசிங்கவின் வாரிசுகளுக்குரிய காணியாலும் ; சூழ்ந்த மூன்று றூட் (0ஏ.3றூ. 0பே.) விஸ்தீரணமுள்ள காணியும் அத்துடன் மண்ணோடு சேர்த்து மரங்கள், பயிர்கள், கட்டிடங்களும் மேலும் அக்காணியில் இருக்கும் அனைத்தும் கொழும்பு காணிப்பதிவு அலுவலகத்தில் C560/60 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப் பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
கம்பஹா.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை காரியாலயம்,
இல. 1/40, பௌத்தாலோக மாவத்தை,
கம்பஹா.

5- 30

---

### மக்கள் வங்கி கண்டி கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் பிரகாரம் கீழ்வரும் தீர்மானம் பணிப்பாளர் சபையினரால் அவர்களின் 20.09.2005 ஆந் திகதி நடந்த கூட்டமொன்றில் ஏகமனதாக பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது:-

"சேம் சமரசேக்கர அன்ட் கம்பனி லிமிட்டெட் கம்பனிகள் சட்டத்திட்டம் 51-1938 தற்போது 17-1982 மற்றும் சுகதபால சமரசேக்கர மற்றும் தம்மிக ஜயமஹா சமரசேக்கர ஆகியோர் கடப்பாடுடையவர்களாக மக்கள் வங்கி சார்பில் கண்டி பிரசித்த நொத்தாரிசு ஏ. கே. விஜேரட்ன என்பவரினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 30.12.2003 ஆந் திகதிய 4041 முறி மீது வருமதியான கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளமையாலும் மக்கள் வங்கிக்கு பன்னிரண்டு இலட்சத்து எண்பத்தாறாயிரத்து நானூற்று அறுபத்து ஒரு எழுபத்தைந்து சதம் (ரூபா 12,86,461.75) மற்றும் இரண்டு இலட்சம் ரூபா (ரூபா 2,00,000.00)தற்போது வருமதியாக உள்ளதாலும் அத்துடன் மக்கள் வங்கி பணிப்பாளர் சபையானது 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 4041 ஆம் இலக்க முறிமூலம் மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட பன்னிரண்டு இலட்சத்து எண்பத்தாறாயிரத்து நானூற்று அறுபத்து ரூபா எழுபத்தைந்தும் (ரூபா 12,286.461.75) மற்றும் இரண்டு இலட்சம் ரூபா (ரூபா 2,00.000.00) மேலும் வட்டியும் பன்னிரண்டு இலட்சத்து எண்பத்தாறாயிரத்து நானூற்று அறுபத்து எழுபத்தைந்து (ரூபா 12,86,461.75) இற்கு 29.03.2004 ஆந் திகதியிலிருந்து 17% வருடாந்த வட்டியுடன் மற்றும் ரூபா இரண்டு இலட்சம் ரூபா (ரூபா 2,00,000.00)இற்கு 01.08.2004 ஆந் திகதியிலிருந்து 15.25% வரு டாந்த வட்டியுடன் பணத்தொகையை விற்பனை நாள்வரை அதன்மீதான வட்டியுடனும் விளம்பர செலவுகள் மற்றும் ஏதேனும் இருப்பனவுகள் இருந்தால் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக கண்டி உரிமம்பெற்ற ஏலவிற்பனை யாளர்களான சொக்மன் அன்ட் சமரவிக்ரம என்பவர்களால் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டும் என இத்தால் தீர்மானிக் கின்றது".

### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைக்குட்பட்ட மாப்பனாவத்துரயில் அமைந்துள்ள கட்புல் லேகும்புர (நடுப்பகுதி) என்றழைக்கப்படும் காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டபிள்யு. ஏ. பியதாச என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 17.05.2003 ஆந் திகதிய 186/1/ 2003 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் விசேடமாக பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டு. இது லொட் 04 என அடையாளமிடப்பட்டது. இதன் எல்லைகள்– வடக்கில் : லொட் 1 ; வடகிழக்கில்: ஸ்ரீமத் குடாரத்வத்த மாவத்தை ; தெற்கில் : ஸ்ரீமத் குடாரத்வத்த மாவத்தை ; மேற்கில் : லொட் 3 அத்துடன் இதனுள் அடங்கும் கட்டிடங்கள் ,மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இதன் பரப்பளவு முப்பத்தேழு தசம் எட்டு எட்டு பர்ச்சஸ் ஆகும். (0ஏ.0றூ.37.88பே.) பூச்சியம் தசம் பூச்சியம் ஒன்பது ஐந்து ஹெக்டயார்.

மேற்படி காணி கீழ் விவரிக்கப்பட்ட அட்டவணைக்கு தொடர்புடைய தாகும் :-

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைக்குட்பட்ட மாப்பனாவத்துரயில் அமைந்துள்ள கட்டுபுல்லே கும்புர (நடுப்பகுதி) என்றழைக்கப்படும் காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஜி. ஹேரத் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப் பட்ட 12.09.1967 ஆந் திகதிய 1803 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் விசேடமாக பிரித்தெடுக்கப்பட்ட காணித் துண்டு. இதன் எல்லைகள் – வடக்கு, வடகிழக்கு, கிழக்கும், தெற்கு ; ஸ்ரீமத் குடாரத்வத்த மாவத்தை ; தென்மேற்கு : வட்டாரம்தென்ன எஸ்டேட் ஏ. சி. ஐ. ரத்வத்தைக்கு சொந்தமானது ; மேற்கு: இதே காணியின் மிகுதிப் பகுதி ஜேமிஸ் பாஸ் மற்றும் வரிமதிப்பீட்டு இல. 50 ஸ்ரீமத் குடாரத்வத்தை மாவத்தை (முன்னர் லேடி மெகலம் டிரைவ்) அத்துடன் இதனுள் அடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இதன் பரப்பளவு ஒரு றூட் ஒன்பது தசம் இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 9.2பே)

இது கண்டி காணிப்பதிவத்தில் ஏ327/ 197 இன் கீழ் பதிவு செய்யபட்டுள்ளது.

2. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைக்குட்பட்ட யட்டிநுவர கங்கவட்ட கோரளை பல்லேகமையில் மாப்பனாவத்துரயில் அமைந்துள்ள மாரபெந்தேகும்புர என்றழைக்கப்படும் காணி 17.05.2003 ஆந் திகதிய 186/1/2003 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் விசேடமாக பிரித்தெடுக்கப்பட்ட லொட் 3 என அடையாளமிடப்பட்டது. இதன் எல்லைகள் - வடக்கு : லொட் 2 ; கிழக்கு : லொட் 4; தெற்கு லொட் 1 T.S.P. 01/25/13-1; W மேற்கு : லொட் 60 T. S.P. 01/25/13-01W அத்துடன் இதனுள் அடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இதன் பரப்பளவு பதினெட்டு தசம் ஏழு ஒன்பது பூச்சியம் பர்ச்சஸ் ஆகும். (0ஏ. 0றூ.18.70பே.) இது கண்டி காணிப்பதிவகத்தில் ஏ354/158 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி காணி கீழ் விவரிக்கப்பட்ட அட்டவணைக்கு தொடர்புடைய தாகும் :-

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைக்குட்பட்ட தற்போது பல்லேகம மாப்பனாவத்துரயில் அமைந்துள்ள யட்டிநுவர கங்கவட்ட கோரளையில் அமைந்துள்ள மாரபெந்தேகும்புர என்றழைக்கப்படும் எல். ஏ. டீ. சி. விஜேதுங்க என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 16.07.1972 ஆந் திகதிய 6591 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் விசேடமாக பிரித்தெடுக்கப்பட்ட லொட் 61 என அடையாளமிடப்பட்டது. இதன் எல்லைகள்- வடக்கு : ஏல மற்றும் பிரதான பாதை ; கிழக்கு : லொட் 2 எஸ். சமரசேக்கரவுக்கு சொந்தமான காணி ; தெற்கு : லேடி மெகலம்ஸ் டிரைவ் ; மேற்கு : லொட் 60 அத்துடன் இதனுள் அடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சலகதுமாகும். இதன் பரப்பளவு இருபத்தொன்பது தசம் எட்டு பூச்சியம் (0ஏ. 0றூ. 29.80பே.) இது கண்டி காணிப்பதிவகத்தில் ஏ222/70 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

உதவி பொது முகாமையாளர்,
(மத்திய வளையம்).

மக்கள் வங்கி,
தலைமை காரியாலயம்,
இல. 17, தலதா வீதி,
கண்டி.

5-32

---

**இலங்கை வங்கி**

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்

(வாதுவை கிளை)- கடன்பெறுநரின் பெயர் - திரு. மஹபடுகே மஞ்சுல பஞ்சபிரசாத் பெர்னான்டோ.

2005.10.13 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது :-

"பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. ஏ. எஸ். சி. மத்தியூ. அத்தாட்சிப்படுத்திய 1997.03.07 ஆந் திகதியிட்ட முறி இல. 1837 இன் பேரில் இல. 14ஏ, கெகுனகஹதுடுவ றோட், வாதுவை என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. மஹபடுகே மஞ்சுல பஞ்ச பிரசாத் பெர்னான்டோ என்பவரிடமிருந்து முதலும் 2005.08.31 வரை வட்டியும் இருபத்தொரு இலட்சத்து ஐந்தாயிரத்து எழுநூற்றி இருபத்தி நான்கு ரூபா இரண்டு சதம் (ரூ. 21,05,724.02) மற்றும் இருபத்தொரு இலட்சத்து ஐம்பத்திநான்காயிரத்து எழுநூற்றி தொண்ணூற்றி நான்கு ரூபா அறுபத்தொரு சதங்களும் (ரூ. 21,54,794.61) அத்துடன் ஆறு இலட்சத்து எண்பத்தெட்டா யிரத்து முந்நூற்றி முப்பது ரூபா (ரூ. 6,88,330) மற்றும் ஏழு இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து முந்நூற்றி நாற்பத்தெட்டு ரூபா எண்பத்திநான்கு சதம் (ரூ. 7,49,348.84) முறையே ஆண்டுக்கு பதினைந்து (15%) மற்றும் பதினைந்து தசம் ஐந்து வீதத்திலும் (15.5%) வட்டியும் 2005.09.01 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. மேற்குறிப்பிட்ட முறி இல. 1837 இன் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட இருபத்தொரு இலட்சத்து ஐந்தாயிரத்து எழுநூற்றி இருபத்தி நான்கு ரூபா இரண்டு சதம் (ரூ. 21,05,724.02) மற்றும் இருபத்தொரு இலட்சத்து ஐம்பத்திநான்காயிரத்து எழுநூற்றி தொண்ணூற்றி நான்கு ரூபா அறுபத்தொரு சதங்களும் (ரூ. 21,54,794.61) அத்துடன் 2005.09.01 தொடக்கம் விற்பனைத் திகதிவரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 55ஏ, தர்மபால மாவத்தை, கொழும்பு 03 என்னும் முகவரியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரமவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமையவும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை, தொட்டமுனை வத்து வஸ்கடு தெபத்தயில் களுத்துறை பிரதேச சபை எல்லைகளுள் மெலேகமயில் அமைந்த மஹவத்த அல்லது கெகுனகஹதுடுவயின் துண்டு 14 என அழைக்கப்படும் காணியின் உததரவுபெற்ற நிலஅளவையாளர் எல். டபிள்யூ. எல். தி சில்வா தயாரித்த 1992, யூன் 18 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 9721 இல் விபரித்த துண்டு 14ஏ என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : வரைபடம் இல. 375 இல் அகல ஒதுக்கப்பட்ட 15 அடி அகல றோட்டும் துண்டு 23 உம் துண்டு 26 உம் வரைபடம் இல. 375 இல் 10 அடி அகல ஒதுக்கப்பட்ட பாதையும் ; கிழக்கில் : வரைபடம் இல. 375 இல் துண்டு 23 உம் (15 அடி பாதை); தெற்கில் : வரைபடம் இல. 3044 இல் துண்டு 1 இன் மீதிப் பாகமும் ; மேற்கில் : வரைபடம் இல. 375 இல் துண்டு 13 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 9721 இன்படி பத்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணமுடையது. இது பாணந்துறை காணிப்பதிவகத்தில் ஜி 113/17 இல் பதிவு செய்யப்பட்டது.

அத்துடன் வழி மீதான உரிமையும் ஆகும்.-

மேற்குறிப்பிட்ட மெலேகமயில் அமைந்த மஹவத்த அல்லது கெகுனகஹதுடுவ என அழைக்கப்படும் காணியும் 1988, ஒற்றோபர் 6 தொடக்கம் 1988, ஒற்றோபர் 8 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 3099 இல் விபரித்த துண்டு ஆர் 3 (15 அடி அகலப் பாதை) என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் :

15 அடி அகலப்பாதைக்கு ஒதுக்கப்பட்டிருப்பதும் ; கிழக்கில் : வரைபடம் இல. 375 இல் துண்டு 15 உம் ; தெற்கில் : வரைபடம் இல. 3099 இல் துண்டு ஆர் 2 உம் ; மேற்கில் : வரைபடம் இல. 375 இல் துண்டு 14 மற்றும் 14சி உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3099 இன்படி ஒன்று தசம் எட்டு சைபர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 1.80பே.) விஸ்தீரணமுடையது. இது பாணந்துறை காணிப் பதிவகத்தில் ஜி 90/263 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட மெலேகமயில் அமைந்த மஹவத்த அல்லது கெகுனகஹதுடுவ என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஸ்ரீ போபேஆரச்சி தயாரித்த 1988, மார்ச் 11 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 375 இல் விபரித்த துண்டு 23 (15 அடி அகலம்) என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : றோட்டும் ; கிழக்கில் : துண்டுகள் 15 தொடக்கம் 22 வரையும்; தெற்கில் : துண்டு 14 உம் ; மேற்கில் : துண்டுகள் 14, 26, 11, 10, 25, 7, 6, 24, 3 மற்றும் 2 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 375 இன்படி இருபத்தொன்று தசம் ஒன்பது சைபர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 21.90பே.) விஸ்தீரணமுடையது. இது பாணந்துறை காணிப்பதிவகத்தில் ஜி 90/247 இல் பதிவு செய்யப்பட்டது.

டபிள்யூ. என். பி. சுரவிமல,
முகாமையாளர்,

இலங்கை வங்கி,
வாதுவை கிளை.

5-50

---

## இலங்கை வங்கி

### 1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்

2006.02.09 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது :-

"திருமதி கே. கே. பி. ரேணுகா த சில்வா அத்தாட்சிப்படுத்திய 2004.05.28 ஆந் திகதியிட்ட முறி இல. 369 இன் பேரில் திரு. ஆரச்சிகே சுனெத் மாலிங்க லொகுஹேவா மற்றும் திரு. ஆரச்சிகே இஷான் கனிஷ்க லொகுஹேவா ஆகியோரிடமிருந்து முதலும் 2005.11.30 வரை 30,00,000 ரூபா கடன் மீது தீர்க்காதிருக்கும் வட்டியுமாக முப்பத்தியிரண்டு இலட்சத்து எண்பதாயிரத்து தொளாயிரத்து எழுபத்தி மூன்று ரூபா தொண்ணூற்றி இரண்டு சதம் (ரூ. 32,80,973.92) அத்துடன் 2005.12.01 தொடக்கம் இருபத்தொன்பது இலட்சத்து பதினெட்டாயிரத்து இருபது ரூபா பதினெட்டு சதத்தில் (ரூ. 29,18,020.18) ஆண்டுக்கு பதினைந்து தசம் ஐந்து வீதத்தில் (15.5%) கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. மேற்குறிப்பிட்ட முறி இல. 369 இன் பேரில் வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட முப்பத்தியிரண்டு இலட்சத்து எண்பதாயிரத்து தொளாயிரத்து எழுபத்தி மூன்று ரூபா தொண்ணூற்றி இரண்டு சதம் (ரூ. 32,80,973.92) அத்துடன் 2005.12.01 தொடக்கம் கடன் ரூபாய் 30,00,000 மீது விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 12, சனச சதுக்கம், நீதிமன்ற றோட், கம்பஹா என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. ரி. எம். எஸ். பீரிஸ் என்பவருக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமையவும், இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி சிரேஷ்ட முகாமையாளருக்கு (அறவிடல் கிளைகள்) இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

#### முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை தாசிய பற்றுவில் கட்டுநாயக்க - சீதுவ பட்டினசபை எல்லைகளுள் லியனகேமுல்ல கிராமத்தில் அமைந்த முனிதாச குமாரதுங்க மாவத்தை, வரிமதிப்பிலக்கம் 477/106 ஐக் கொண்ட "பாபாகுருவத்த" என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. ஜே. நாணயக்கார தயாரித்த 1982, நவெம்பர் 9 ஆந் திகதியிட்ட மிகவும் சரியானது 1981, திசெம்பர் 18 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2382 இல் விபரித்த துண்டு 33 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : துண்டு பீ உம் ; கிழக்கில் : துண்டு 34 உம்; தெற்கில் : துண்டு 32 உம் ; மேற்கில் : துண்டு 1 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2382 இன்படி பத்து தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 10.25பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் சி 694/115 இல் பதிவு செய்யப்பட்டது.

#### இரண்டாவது அட்டவணை

மேற்குறிப்பிட்டவாறு லியனகேமுல்ல கிராமத்தில் அமைந்த "பாபாகுருவத்த" என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2382 இல் விபரித்த துண்டு ஏ (பாதைக்கு ஒதுக்கப்பட்டது) என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : துண்டுகள் 2 மற்றும் 3 உம் ; கிழக்கில் : துண்டுகள் 44 மற்றும் 46 உம் ; தெற்கில் : வெலபொட றோட்டும் ; மேற்கில் : ஜே. ஈ. பி. ராஜபக்ஷ மற்றும் ஏனையோரின் வாரிசுகள் உரிமைகோரும் காணியும் துண்டு 47, துண்டு எச் மற்றும் துண்டு 40

தொடக்கம் 43 மற்றும் துண்டு பீ யும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2382 இன்படி ஒரு றூட் நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 4பே.) விஸ்தீரணமுடையது. இது நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் சி 735/288 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்டவாறு லியனகேமுல்ல கிராமத்தில் அமைந்த "பாபாகுருவத்த" என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2382 இல் விபரித்த துண்டு பீ (பாதைக்கு ஒதுக்கப்பட்டது) என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : துண்டுகள் 3 தொடக்கம் 15 உம் ; கிழக்கில்: துண்டு ஏ உம் ; தெற்கில் : துண்டுகள் 43, 38, 37, 34, 33, 26, 25, 22, 21 மற்றும் துண்டு டி மற்றும் துண்டு 1 உம் ; மேற்கில் : துண்டு 16 மற்றும் துண்டு சி உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2382 இன்படி ஒரு றூட் ஐந்து தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 5.5பே.) விஸ்தீரணமுடையது. இது நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் சி 646/294 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்டவாறு லியனகேமுல்ல கிராமத்தில் அமைந்த "பாபாகுருவத்த" என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2382 இல் விபரித்த துண்டு 1 (பாதைக்கு ஒதுக்கப்பட்டது) என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : துண்டு பீ உம் ; கிழக்கில் : துண்டு 30 தொடக்கம் 33 உம் ; தெற்கில் : துண்டு எச் உம் ; மேற்கில் : துண்டு 26 தொடக்கம் 29 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2382 இன்படி பதினொரு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 11பே.) விஸ்தீரணமுடையது. இது நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் சி 658/256 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

எம். ஏ. ஜி. கருணாரட்ன,
சிரேஷ்ட முகாமையாளர்,
(அறவிடல் - கிளைகள்).

இலங்கை வங்கி,
தலைமை அலுவலகம்,
4 இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 1.

5-51

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 4.45 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டுக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.-*** *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

**அட்டவணை-2006**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மே** | .. | வெள்ளி | 05.05.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.04.2006 |
| | | வியாழன் | 11.05.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.04.2006 |
| | | வெள்ளி | 19.05.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.05.2006 |
| | | வெள்ளி | 26.05.2006 | .. | நண்பகல் 12 | வியாழன் | 11.05.2006 |
| **யூன்** | .. | வெள்ளி | 02.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.05.2006 |
| | | வெள்ளி | 09.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.05.2006 |
| | | வெள்ளி | 16.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.06.2006 |
| | | வெள்ளி | 23.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.06.2006 |
| | | வெள்ளி | 30.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.06.2006 |
| **யூலை** | .. | வெள்ளி | 07.07.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.06.2006 |
| | | வெள்ளி | 14.07.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.06.2006 |
| | | வெள்ளி | 21.07.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.07.2006 |
| | | வெள்ளி | 28.07.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.07.2006 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2006, சனவரி 01.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.